# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 06-ஆம் நாள், சனிக்கிழமை

**<u>I.A. No. 14 of 2023 in I.A. No. 3 of 2023</u>**
**<u>in</u>**
**<u>O.S. No. 107 of 2022</u>**
**<u>(CNR No. TNSA13-000113-2022)</u>**

P. நல்லதம்பி .. மனுதாரர் / வாதி

எதிராக

1. K. பெரியசாமி
2. P. கலா .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 05.03.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சந்தானம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

மனுதாரர் / வாதி இம்மனுவை நீதிமன்ற ஆணையர் வழக்கு இடத்தை பார்வையிடும்போது தான் கொடுத்த குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள

சங்கதிகளையும் குறிப்பிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / வாதி தன்னுடைய மனுவில் இடை மனு எண் 3/2022-ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தினை நீக்கம் செய்யக்கோரி தான் தாக்கல் செய்த மனுவில் மீண்டும் வழக்கு இடத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும், 05.08.2023 தேதியன்று நீதிமன்ற ஆணையர் வழக்கு இடத்தை பார்வையிட்டதாகவும், அவ்வாறு பார்வையிடுவதற்கு முன்பாகவே தான் ஒரு குறிப்பாணையை நீதிமன்ற ஆணையரிடம் வழங்கி அதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடும்படி கூறியதாகவும், தான் குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் வழக்கில் இறுதி தீர்வு காண அவசியம் என்பதால் அவற்றை பார்த்து நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில், நீதிமன்றம் புல எண் 920/1 மற்றும் தாவா சொத்தை மட்டும் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும்படி தான் உத்தரவிட்டுள்ளது என்றும், 05.08.2023 தேதியன்று அளவையர் உதவியுடன் முட்டுக் கற்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது புல எண் 913/7-ஐ நீதிமன்ற ஆணையர் பார்வையிட வேண்டிய கேள்வி எழாது என்றும், தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்தில் எழுப்பப்பட்டுள்ள புதிய கட்டுமானங்கள் குறித்து நீதிமன்ற ஆணையர் பார்வையிட வேண்டிய அவசியமில்லை என்றும், புல எண் 920/1, 920/2, 920/6-ல் எழுப்பப்பட்டுள்ள கட்டுமானங்களை பார்வையிட வேண்டிய அவசியமில்லை என்றும், மனுதாரர் / வாதி நீதிமன்ற ஆணையர் மூலம் தனது வழக்கிற்கு சாட்சியங்களை தயார் செய்ய முயல்வதாகவும், இன்றைய தேதி வரையிலும் சொத்து விவரம், புல எண்கள் சம்மந்தமாக திருத்தம் செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. ஏற்கனவே இந்நீதிமன்றம் இடை மனு எண் 10/2022-ல் நீதிமன்ற ஆணையர் மீண்டும் வழக்கு இடத்தையும், புல எண் 920/1-ல் அமைந்துள்ள வண்டித் தடத்தையும் மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் புல எண் 920/4-ல் அமைந்துள்ள சொத்துக்களையும் அளவையர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியின் துணையுடன் பார்வையிட்டும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் கார்ஷெட், இரும்பு கேட் மற்றும் அங்குள்ள இயற்கை அமைப்புகளை பார்வையிடுமாறு கூறி தான் மீண்டும் வழக்கு இடத்தை பார்வையிட உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. நீதிமன்ற ஆணையருக்கு மனுதாரர் / வாதி தரப்பில் வழங்கப்பட்டுள்ள குறிப்பாணையில் புல எண் 920/1, 920/4, 920/3 ஆகியவற்றின் அமைப்பு குறித்தும், அதில் எழுப்பப்பட்டுள்ள கட்டுமானங்கள் குறித்தும், புல எண் 920/3-ல் அமைந்துள்ள தென்வடல் பாதை சம்மந்தமாகவும், புல எண் 920/4 மற்றும் 3-ல் உள்ள கட்டிடங்களுக்கு புல எண் 920/5-ல் உள்ள சாலையின் வழியாக செல்ல முடியும் என்பதையும் புல எண் 920/1, 920/2, 920/3, 920/4 ஆகியவற்றில் உள்ள நிலங்களையும், வீடுகளையும் அளக்க வேண்டுமெனவும், மற்றும் அங்குள்ள இரும்பு கேட்டானது புல எண் 920/4-ல் அமைந்திருக்கவில்லை என்பதையும், புல எண் 920/4-ல் எழுப்பப்பட்டுள்ள கட்டிடம் புல எண் 920/1-ல் உள்ள நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளது என்பது குறித்தும் பார்வையிட வேண்டுமென்று கூறியுள்ளார். ஏற்கனவே இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் புல எண் 920/4-ல் உள்ள சொத்தினையும், தாவா வண்டிப்பாதையையும் மற்றும் மனுதாரர் / வாதியின் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள இரும்புகேட், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் கார்ஷெட் மற்றும் இயற்கை அமைப்புகள் அனைத்தையும் பார்வையிட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ள நிலையில், புதியாக புல எண் 920/5, 920/6, 920/3 ஆகியவற்றையும் அளந்து பார்க்க வேண்டுமென்று மனுதாரர் / வாதி இந்நீதிமன்றம் உத்தரவிடாத சில சங்கதிகள் குறித்து குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டிருப்பது ஏற்க கூடியதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை என்ன காரணத்திற்காக நீதிமன்ற ஆணையர் பார்வையிட வேண்டும் என்ற காரணத்தை கூட மனுதாரர் / வாதி

மனுவில் குறிப்பிடாத நிலையில் அவற்றை ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. புல எண் 920/1, 920/4, 920/3 ஆகியவற்றின் அமைப்பு குறித்தும் புல எண் 920/3-க்கு கிழபுறத்தில் செல்லும் தென்வடல் பாதை குறித்தும், புல எண் 920/4 மற்றும் 3-க்கு செல்லக்கூடிய பாதை குறித்தும், இரும்புகேட் எந்த புல எண்ணில் அமைந்துள்ளது, புல எண் 920/1-ல் ஏதேனும் ஆக்கிரமிப்பு உள்ளதா என்பதை மட்டும் பார்வையிட்டு தாக்கல் செய்தால் போதுமானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நீதிமன்றம் இம்மனுவை பகுதியாக அனுமதிக்க முடிவு செய்கிறது.

6. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் பகுதியாக அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 06-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

முு.மா.உ.நீ., (முு.கூ.பொ.) ஆத்தூர்.

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

இ.ம.வ. எண் 14/2023

---------------

அ.வ. எண் 107/2022

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 06.04.2024